பக்கங்கள் 14

# மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 தை 04 வியாழக்கிழமை 18.01.2024 அதிர்வு 171

## காணியில் இருந்து கைக்குண்டு மீட்பு!



பதுளை – மஹியங்கனை வீதியில் உள்ள காணி யொன்றில் இருந்து இன்று காலை கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளது என்று பதுளை பொலிஸார்

04



# இராணுவத்தினரைக் காட்டிக் கொடுத்து தமிழ் வாக்குகளைப் பெற ரணில் முயற்சி

## இப்படிக் குற்றம் சாட்டுகின்றார் விமல்



"ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் வாக்குகளைப் பெறுவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இராணுவத்தினரைக் காட்டிக் கொடுக்கும் சட்டங்களை இயற்ற முயற்சிக்கின்றார். சரத் பொன்சேகாவைத் தவிர ஏனைய இராணுவ அதிகாரிகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யும் வகையில் உண்மையைக் கண்டறிதல் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு சட்ட வரைவு தயாரிக்கப்பட்டுள்ளது."

- இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

04

# யாழ். பல்கலை முன்றலில் போராட்டம்






(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தால் இன்று கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி இன்று வேலைநிறுத்த முன்னெடுக்கப்படுவதுடன் அதன் அடையாளமாக நண்பகல் 12 மணியளவில் யாழ். பல்கலைக்கழக பிரதான நுழைவாயில் முன்பாக ஒன்றுகூடிய பல்கலைக்கழக ஊழியர்கள் போராட்டத்திலும் ஈடுபட்டனர்.

பல்கலைக்கழக கல்விசாராப் பணியாளர்களின் சம்பள முரண்பாடு, சம்பள அதிகரிப்பு மற்றும் அவர்களைப் பாதிக்கும் பிரச்சினைகளில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும் அரசும் தொடர்ந்து ஏமாற்றி வருகின்றமைக்கு எதிர்ப்புத்தெரிவித்தே இந்தக் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.



# ஜனாதிபதி நியமித்த குழுவால் புதிய சட்ட வரைவு கையளிப்பு

**பேச்சு சுதந்திரம் மற்றும் கருத்துச் சுதந்திரம் மற்றும் ஆக்கபூர்வ உரிமைகளைப் பாதுகாப்பதை அடிப்படையாகக் கொண்டு பொது அரங்கக்கலை வகைப்படுத்தல் சட்ட வரைவு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் நியமிக்கப்பட்ட உறுப்பினர் குழுவால் அண்மையில் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவிடம் கையளிக்கப்பட்டது என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு இன்று வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.**

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

இந்த புதிய வரைவைத் தயாரிப்பதற்காக தணிக்கை சபையின் முன்னாள் தலைவர் சமன் அதாவுதஹெட்டி தலைமையில் நியமிக்கப்பட்ட குழுவில் திரைப்படவியலாளர் அசோக ஹாதகம, நாடகக் கலைஞர் ராஜித திஸாநாயக்க, படைப்பாளர் அனோமா ராஜ கருணா மற்றும் ஜனாதிப தி சட்டத்தரணி ஜகத் விக்கிரமநாயக்க ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

திரைப்படம், நாடகம் மற்றும் கலை நிகழ்ச்சிகளில் ஈடுபட்டுள்ள பல்வேறு தரப்பினருடன் கலந்தாலோசித்து புதிய சர்வதேச போக்குகள் மற்றும் தரநிலைகளுக்கு ஏற்ப இந்த வரைபு தயாரிக்கப்பட்டுள்ளது.

தற்போது நடைமுறையில் உள்ள 1912 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட பொது அரங்கேற்றக்கலை கட்டளைச் சட்டத்தினை ஆராய்ந்து இந்தப் புதிய சட்டத்தைச் செயற்படுத்த எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தச் சட்டத்தின் ஊடாக கலைப் படைப்புகள் தொடர்பில் எழுந்துள்ள பல பிரச்சினைகளுக்குத் தீர்வுகள் வழங்கப்பட்டுள்ளன எனவும், இந்தச் சட்டத்தின் மூலம் படைப்பு சுதந்திரம் முழுமையாகப் பாதுகாக்கப்படும் எனவும் குழுவின் தலைவர் சமன் அதாவுதஹெட்டி தெரிவித்தார். - என்றுள்ளது.

## இரு சர்வதேச மாநாடுகளில் உரையாற்றுவதற்காக

# ஜனாதிபதி ரணில் உகண்டா பயணம்

அணிசேரா நாடுகளின் மாநாட்டின் 19 ஆவது அரச தலைவர்கள் மாநாடு மற்றும் ஜி-77 மற்றும் சீனாவின் 3 ஆவது தென் மாநாடு என்பவற்றில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உகண்டாவுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ளார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு இன்று வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

உகண்டா குடியரசு ஜனாதிபதி யொவேரி முசேவெனியின் அழைப்பின் பேரிலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

அணிசேரா நாடுகளின் மாநாட்டின் 19 ஆவது அரச தலைவர்கள் மாநாடு, “உலளாவிய கூட்டு செழுமைக்கான ஒத்துழைப்புக்களை விரிவுபடுத்தல்” என்ற தலைப்பில் ஜனவரி 19 மற்றும் 20 ஆம் திகதிகளில் உகண்டாவின் கம்பாலா நகரில் நடைபெறவுள்ளது.

அதனையடுத்து, ஜி 77 மற்றும் சீனாவின் 3 ஆவது

04▶





# காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் மீதான தாக்குதல்: சந்தேகநபர்களின் வெளிநாட்டுப் பயணத் தடை நீக்கம்!

கொழும்பு, காலிமுகத்திடலில் கடந்த வருடம் மே மாதம் 9 ஆம் திகதி போராட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கின் சந்தேகநபர்கள் அனைவரினதும் வெளிநாட்டுப் பயணத் தடையை நீக்குமாறு கோட்டை நீதிவான் திலின கமகே உத்தரவிட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பிலான வழக்கு நேற்றுப் புத்தங்களமாய் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவைப் பிறப்பித்த நீதிவான், குடிவரவு - குடியகல்வுக் கட்டுப்பாட்டாளர் நாயகத்துக்கு அறிவிக்குமாறு நீதிமன்றப் பதிவாளருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இந்த வழக்கின் விசாரணைகள் நிறைவடைந்துள்ளன என்றும், அதற்கான கோப்பு சட்டமா அதிபரின் ஆலோசனைக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என்றும் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் நீதிமன்றில் தெரிவித்துள்ளது.

போராட்டக்காரர்கள் மீதான தாக்குதல் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான மிலன் ஜயதிலக்க, சனத் நிஷாந்த மற்றும் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ உள்ளிட்ட 36 சந்தேக நபர்களில் 30 பேர் திறந்த நீதிமன்றில் ஆஜராகியிருந்தனர்.

# 15 வயது மாணவன் வாகன விபத்தில் பலி

லொறியின் பின்புறத்துடன் மோட்டார் சைக்கிள் மோதிய விபத்தில் 15 வயதுடைய பாடசாலை மாணவர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று மதுரங்குளிய பொலிஸார் தெரிவித்தனர்.

மதுரங்குளி பகுதியைச் சேர்ந்த தரம் 10 இல் கல்வி கற்ற கலீல் அஹமட் மொஹமட் என்ற பாடசாலை மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மதுரங்குளி முஸ்லிம் மகா வித்தியாலயத்திற்கு அருகில் நேற்று இரவு இடம்பெற்ற இந்த விபத்தில் உயிரிழந்த மாணவன், நண்பனிடம் மோட்டார் சைக்கிளில் சிறிது தூரம் சென்று கொண்டிருந்தபோது முன்னால் சென்ற லொறியின் பின்புறத்தில் மோதி உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள 300 குடும்பங்களுக்கு நிவாரணம்

(பாறுக் ஷிஹான்)

காரைதீவு பிரதேசத்தில் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு வாழ்வாதாரத்தை இழந்துள்ள தெரிவு செய்யப்பட்ட 300 பயனாளி குடும்பங்களுக்கு புளொட் அமைப்பால் நிவாரண பொதிகள் நேற்று புதன்கிழமை(17) வழங்கப்பட்டன.

புளொட் அமைப்பின் அம்பாறை மாவட்ட பொறுப்பாளர் ப. ரவிச்சந்திரனின் தலைமையில் காரைதீவை சேர்ந்த புளொட் செயற்பாட்டாளர்கள் நிவாரண பொதிகளை வழங்கினர்.



அமைப்பின் ஜேர்மன் கிளையை சேர்ந்த தோழர்கள் இந்த வேலை திட்டத்துக்கான நிதிப் பங்களிப்பை மேற்கொண்டிருந்தனர்.

# ஒற்றையாட்சியை வலுவிழக்கச் செய்தால் கட்சியில் இருந்து உடனடியாக விலகுவேன்

## மொட்டுக்கு வீரசேகர பகிரங்க எச்சரிக்கை



“ஒற்றையாட்சிக்கு அச்சுறுத்தலான விடயங்களுக்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி ஆதரவு வழங்குமானால் அக்கட்சியில் இருந்து நிச்சயம் வெளியேறுவேன்.”

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:–

“நான் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியில்தான் இன்னும் இருக்கின்றேன். செயநன்றி கடனுக்காகக் கட்சியில் தொடர்கின்றேன். மொட்டுக் கட்சிதான் வேட்புமனு வழங்கியது. கொழும்பு மாவட்டத்தில் 3 இலட்சத்துக்கும் அதிக வாக்குகளைப் பெற்றேன். கொழும்பு மாவட்டத்தில் முதலாம் இடத்தையும், தேசிய ரீதியில் இரண்டாம் இடத்தையும் பிடித்தேன். கட்சி வீழ்ந்திருக்கும் நேரத்தில் அதை விட்டுவிட்டுச் செல்வது நல்லதல்ல.

எனினும், நாட்டைப் பிளவுபடுத்தும், இராணுவத்துக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு அதேபோல் ஒற்றையாட்சிக்கு எதிரான விடயங்களுக்குக் கட்சி நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஆதரவு வழங்கினால் அதன் பின்னர் அங்கு இருக்கமாட்டேன்.” – என்றார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### காணியில் இருந்து...

தெரிவித்தனர்.

பதுளை – மஹியங்கனை வீதியின் கைலாகொட பிரதேசத்தில் அமைந்துள்ள பழைய பொலிஸ் கட்டிடத்துக்கு அருகில் கைக்குண்டு காணப்படுகின்றது என்று பதுளை பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலுக்கு அமைய அந்தப் பகுதிக்கு சென்று கைக்குண்டுடை மீட்டுள்ளதாகப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

கே 90 ரக கைக்குண்டே மீட்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸார் முன்னெடுக்கும் யுக்திய நடவடிக்கைக்கு அஞ்சி, கைக்குண்டு குறித்த பகுதியில் வீசப்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

மேலதிக விசாரணைகளை பதுளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

### இராணுவத்தினரை...

“பொருளாதார நெருக்கடியால் ஒட்டுமொத்த மக்களும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் நாட்டுக்கு எதிரான கீழ்த்தரமான செயற்பாடுகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ ஆகியோர் முன்னெடுத்துள்ளனர். 2015 ஆம் ஆண்டு அப்போதைய வெளிவிவகாரத்துறை அமைச்சர் மங்கள சமரவீர இலங்கைக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட 30/1 தீர்மானத்துக்கு இணை அனுசரனை வழங்கினார். இந்தத் தீர்மானத்தை நாட்டு மக்களும், நாடாளுமன்றமும் அப்போது அறிந்திருக்கவில்லை.

நாட்டுக்கு எதிராக ஒப்பந்தங்கள் மற்றும் தீர்மானங்களில் இருந்து விலகுவதாக 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல் காலத்தில் ராஜபக்ஷக்கள் மக்களுக்கு வாக்குறுதி வழங்கினார்கள். அந்த வாக்குறுதிகளுக்கு அமைய கோட்டபய ராஜபக்ஷ தலைமையிலான அரசை நாட்டு மக்கள் தோற்றுவித்தார்கள்.

இலங்கைக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட 30/1 தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கும் இணக்கப்பாட்டில் இருந்து இலங்கை விலகியுள்ள நிலையில் அந்தத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்ட முக்கிய விடயங்களில் பல சட்ட வகிபாகத்துடன் தற்போது நிறைவேற்றப்பட்டுள்ளன.

காணாமல்போனோர் தொடர்பான அலுவலகம், 2017 ஆம் ஆண்டு நாடு கடத்தல் சட்டம், இழப்பீட்டுக்கான அலுவலக சட்டம், பலவந்தமாகத் தடுக்கும் சட்டம், பாதிக்கப்பட்டோர் மற்றும் சாட்சியாளர்களைப் பாதுகாக்கும் சட்டம் என்பன இயற்றப்பட்டுள்ளன. அண்மையில் நாடாளுமன்றத்தில் ஒற்றுமை மற்றும் தேசிய நல்லிணக்கத்துக்கான சட்டம் இயற்றப்பட்டுள்ளன.

உண்மையைக் கண்டறிதல் மற்றும் தேசிய நல்லிணக்க ஆணைக்குருவை ஸ்தாபித்தல் சட்ட வரைவுக்கான வர்த்தமானி புதுவருட தினத்தன்று வெளியிடப்பட்டுள்ளது. புலம்பெயர் அமைப்புக்கள் மற்றும் சர்வதேச நாடுகளின் பணிப்புரைக்கு அமைய 2015 ஆம் ஆண்டு முதல் திருட்டுத்தனமாக இயற்றப்பட்ட சட்டங்கள் அனைத்தையும் வலுப்படுத்தும் வகையில் உண்மையைக் கண்டறிதல் மற்றும் தேசிய நல்லிணக்க ஆணைக்குழு சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சட்டமூலத்துக்கு அமைய ஆணைக்குழு ஸ்தாபிக்கப்பட்டால் தற்போது நடைமுறையில் உள்ள சாட்சி கட்டளைச் சட்டம் வலுவிழக்கப்படும். இராணுவத்தினருக்கு எதிராக எவர் வேண்டுமானாலும் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கலாம். பொய் சாட்சியம் வழங்கலாம். சரத் பொன்சேகாவைத் தவிர ஏனைய இராணுவ அதிகாரிகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய முடியும்.

தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்றுக்கொள்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இராணுவத்தினரைக் காட்டிக் கொடுக்கும் வகையில் செயற்படுகின்றார். ஆச்சரியம் என்னவென்றால் யுத்த வெற்றியைப் பிரதான தேர்தல் பிரசாரமாக கொள்ளும் ராஜபக்ஷக்கள் இராணுவத்தினருக்கு எதிரான சட்டமூலங்களுக்கு ஆதரவாகச் செயற்படுகின்றார்கள். ஆகவே, இந்தச் சட்டமூலத்துக்கு எதிராக ஒட்டுமொத்த மக்களும் ஒன்றிணைய வேண்டும்.” – என்றார்.

### ஜனாதிபதி ரணில்...

**(இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)**

தென் மாநாடு ஜனவரி 21 –22 ஆம் திகதிகளில் “எவரையும் கைவிடக்கூடாது” என்ற தலைப்பில் கம்பாலா நகரில் நடைபெறவுள்ளது.

மேற்படி இரு மாநாடுகளிலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உரையாற்றவுள்ளதோடு, ஆபிரிக்க வலயத்தில் காணப்படும் உலக தெற்கு நாடுகளின் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகளையும் சந்திக்கவுள்ளார்.

அணிசேரா நாடுகளின் அமைப்பில் 120 நாடுகள் அங்கம் வகிப்பதோடு, பெண்டூன்க் கொள்கையை மையப்படுத்தி அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் தேவைகளை நிறைவேற்றும் நோக்குடன் செயற்பட்டு வருகின்றது.

இலங்கை அணிசேரா நாடுகள் அமைப்பின் ஆரம்ப உறுப்பினர் என்பதோடு 1976 – 1979 அதன் தலைமைத்துவத்தையும் வகித்துள்ளது. 1976 ஆம் ஆண்டில் 5 ஆவது அரச தலைவர்கள் மாநாட்டை இலங்கை நடத்தியது.

ஜி 77 மற்றும் சீனாவின் 3 ஆவது தெற்கு மாநாட்டில் 134 நாடுகள் அங்கம் வகிப்பதோடு, வர்த்தகம், முதலீடு, நிலையான அபிவிருத்தி, காலநிலை அனர்த்தம், வறுமை ஒழிப்பு மற்றும் டிஜிட்டல் பொருளாதாரம் உள்ளிட்ட விடயங்களில் ஒத்துழைப்புக்களை பலப்படுத்தும் நோக்கில் நடத்தப்படுகின்றது.

ஐக்கிய நாடுகள் சபையில் அங்கம் வகிக்கும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் மிகப் பெரிய கூட்டிணைவு என்ற வகையில், உலகளாவிய தெற்கு நாடுகள் தங்களது கூட்டு பொருளாதார தேவைகளை அறிவித்தல், மேம்படுத்தல் மற்றும் உலகளாவிய தெற்கு நாடுகளின் பேச்சு என்பவற்றிக்கு இந்த மாநாடு களம் அமைக்கும்.

ஜி 77 மற்றும் சீன மாநாட்டின் தலைமைத்துவத்தை இதுவரையில் கியூபாவும், அணிசேரா நாடுகள் அமைப்பின் தலைமைத்துவத்தை அசர்பைஜான் குடியரசும் வகித்து வரும் நிலையில், மேற்படி இரு மாநாடுகளுக்கும் இம்முறை உகண்டா குடியரசு தலைமைதாங்க உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் உகண்டா விஜயத்தில் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தன, காலநிலை அனர்த்தம் தொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜேவர்தன ஆகியோரும் கலந்துகொண்டுள்ளனர். – என்றுள்ளது.

# வேலணையில் சட்டவிரோத செயற்பாடுகள்; கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுங்கள்!

## நீதி அமைச்சரிடம் கோரிக்கை

(த.சுபேசன்)

யாழ்ப்பாணம், வேலணைப் பிரதேசத்தில் இடம்பெறும் சட்டவிரோத செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துமாறு நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவிடம் வேலணைப் பிரதேச பொது அமைப்பினுடைய பிரதிநிதி கோரிக்கை விடுத்துள்ளார்.

தென்மராட்சியில் அமைந்துள்ள பனை ஆராய்ச்சி நிறுவனத்தில் நீதி அமைச்சருக்கும் கிராம மட்ட சகவாழ்வு மன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பு இடம்பெற்றபோதே வேலணை கிழக்கு மத்தி கிராமத்தின் பிரதிநிதி இந்தக் கோரிக்கையை அமைச்சரிடம் முன்வைத்திருந்தார்.

இது தொடர்பாக வேலணை கிழக்கு மத்தி கிராம பிரதிநிதி கருத்துத் தெரிவிக்கையில்,

வேலணை பிரதேசத்தில் கடற்தொழில் மற்றும் விவசாயம் ஆகியன பிரதான தொழில்களாக உள்ளன.

கால்நடை வளர்ப்பின் ஊடாக அதிக மக்கள் வருமானம் ஈட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் சட்டவிரோதமாகக் கால்நடைகளைத் திருடி இறைச்சியாக்கும் சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன.

குறிப்பாகப் பசு மாடுகள் மற்றும் கன்றுத் தாச்சி மாடுகளை திருடி ஈவிரக்கமின்றி இறைச்சியாக்கின்றனர்.

தினமும் சராசரியாக 3 மாடுகள்வரை இவ்வாறு இறைச்சியாக்கப்படுகின்றன. இதனால் மக்கள் வாழ்வாதார ரீதியாக வெகுவாகப் பாதிக்கப்படுகின்றனர்.

இது தொடர்பாகப் பிரதேச செயலக மற்றும் மாவட்ட மட்ட கலந்துரையாடல்கள்வரை கொண்டு சென்றுள்ள போதிலும் இன்றுவரை தீர்வு கிடைக்கவில்லை.

அத்துடன் வேலணை நீர்வளம் குறைந்த பிரதேசமாக உள்ளது. நீர்வளத்தைப் பாதுகாக்க வேண்டிய தேவைப்பாடு உள்ளது. இருப்பினும் சட்டவிரோத மணல் அகழ்வு அதிகளவில் இடம்பெறுவதால் குடி தண்ணீர் உவர் நீராக மாறி வருகின்றது.

1990-2019 காலப் பகுதிக்கு இடையில் வேலணையில் 70 சதவீதமான நன்னீர் கிணறுகள் உவர் நீராக மாறிவிட்டன. எனவே வேலணை மக்களுக்கு பாரிய சவால்களாக காணப்படுகின்ற கால்நடைத் திருட்டு மற்றும் மணல் அகழ்வு ஆகியவற்றை உரிய திணைக்களங்கள் ஊடாக கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.- என்றார்.



# புத்தளம் தூய தேசம் இயக்கத்தால் பாடசாலை இலச்சினை கையளிப்பு

(கற்பிட்டி செய்தியாளர்)

புத்தளம் உடப்பு தமிழ் மகா வித்தியாலயம் 1903 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு நூற்றாண்டுகளை கடந்து கல்வி மற்றும் பண்பாட்டு வளர்ச்சிகளையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்தப் பாடசாலையை புத்தளம் தூய தேச இயக்கம் தமது அபிவிருத்தி பாதை செயற்பாடுகளில் இணைத்துக் கொண்டு பயணிக்கும் நோக்கோடு அதன் முதற்கட்ட செயற்பாடாக பாடசாலையின் இலச்சினையை வழங்கியுள்ளனர்.

உடப்பு தமிழ் வித்தியாலய பாடசாலை மாணவர்களிடம் தூய தேச இயக்கத்தின் தலைவர் இசாம் மரைக்காரால் கையளிக்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## காற்று மாசால் பாதிப்பு

கொழும்பு, காலி, யாழ்ப்பாணம், மன்னார் மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் வசிப்பவர்கள் - குறிப்பாக நோயுற்றவர்கள், கர்ப்பிணிகள், குழந்தைகள் மற்றும் முதியவர்கள் - வெளியில் முகமூடி அணிந்து செல்வது நல்லது என சுகாதார ஆலோசனை வழங்கப்பட்டிருக்கின்றது.

இந்த மாவட்டங்களிலும் காற்றின் தரம் மிகக் குறைவாக - மிக மோசமாக - இருப்பதால் இப்பிரதேசத்தில் உள்ளவர்களை - விசேடமாக சுவாசத் தாக்கங்களுக்கு இலக்காகக் கூடிய பிரிவினரை - முகமூடிகளை அணியுமாறு இலங்கையின் மத்திய சுற்றாடல் அதிகாரசபை அறிவுறுத்தியுள்ளது.

இந்தியாவில் இருந்து மாசுபட்ட காற்றை எடுத்து வரும் வளிமண்டல பெயர்ச்சி இங்குள்ள காற்றின் தரத்தில் வீழ்ச்சியை - பின்னடைவு நிலையை - ஏற்படுத்தியிருப்பதாக மத்திய சுற்றாடல் அதிகாரசபை ஊடகப் பேச்சாளர் அஜித் வீரசுந்தர தெரிவித்தார்.

“நாங்கள் காற்றின் தரத்தை தொடர்ந்து கண்காணித்து வருகிறோம், கடந்த சில நாள்களாகப் பாதிப்பு நிலைமை மோசமடைவதை அவதானித்துள்ளோம். காற்றின் தரம் மனித ஆரோக்கியத்தில், குறிப்பாக பாதிக்கப்படக்கூடிய மக்களிடையே சில தாக்கங்களை ஏற்படுத்தக்கூடிய நிலையில் நாம் இப்போது இருக்கிறோம்” என்று அவர் கூறினார்.

வீசும் காற்றின் போக்கு மாற்றத்தை தொடர்ந்து இலங்கையில் காற்றின் தரம் மேம்படும் என வீரசுந்தர நம்பிக்கை தெரிவித்தார்.

இந்தியத் துணைக் கண்டத்தில் இருந்து வீசும் மாசுபட்ட காற்று காரணமாக டிசம்பர் மற்றும் ஜனவரி மாதங்களில் இலங்கையில் காற்றின் தரத்தில் இந்த வீழ்ச்சியை நாடு அனுபவிக்கிறது என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

இந்தியாவில் ஏற்பட்டுள்ள வளி மாசடைவு காரணமாகவும், இலங்கையில் வளிமண்டல எல்லைப் பகுதியில் வளி மாசடைந்துள்ளதாக வேறு சில ஆய்வு நிறுவனங்களும் சுட்டிக்காட்டியுள்ளன.

சுற்றுப்புற காற்று மாசுபாட்டினால் ஏற்படும் பக்கவாதம், இதய நோய், நுரையீரல் புற்றுநோய் மற்றும் நாள்பட்ட சுவாச நோய் போன்றவை வருடத்திற்கு 42 லட்சம் இறப்புகளுக்கு காரணமாகின்றன எனப் புள்ளி விவரங்கள் கூறுகின்றன.

உலகில் ஒன்பது இறப்புகளில் ஒன்று காற்று மாசுபாட்டால் ஏற்படுகிறது என உலக சுகாதார நிறுவனத்தின் பிந்திய ஆய்வறிக்கை தெரிவிக்கின்றது.

உலக மக்கள் தொகையில் 99 சதவீத மக்கள் தரமற்ற வளியைச் சுவாசிக்கின்றனர் என்றும் உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

அத்தோடு சமீபத்திய ஆய்வுகள், காற்றின் உயர் மாசுபடுத்தப்பட்ட நிலை குழந்தைகளின் மன ஆரோக்கியத்தைப் பாதிக்கலாம், கவலை மற்றும் மனச்சோர்வுக்கு வழிவகுக்கும் மற்றும் அவர்களின் உடல் வளர்ச்சியைத் தடுக்கிறது எனத் தெரிவிக்கின்றன.

உலகின் ஏனைய பகுதிகளைப் போன்று இலங்கையிலும் வளி மாசடைவு இதய நோய் அபாயத்தை அதிகரித்துள்ளதாக கொழும்பு தேசிய வைத்தியசாலையின் இதய நோய் சிகிச்சை வைத்திய நிபுணர் அனிந்து பத்திரன தெரிவித்துள்ளார்.

வளி மாசடைவு இதய நோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளை மட்டுமல்ல, உயர் இரத்த அழுத்தம், கொழுப்பு, நீரிழிவு, புற்று நோய்கள் மற்றும் நீண்டகால நுரையீரல் நோய்கள் போன்ற பிற தொற்றாத நோயுடையவர்களையும் பாதிக்கிறது என்கிறார் அவர்.

வளி மாசடைதல் அல்லது காற்று மாசடைதல் என்பது மனிதனால் உருவாக்கப்பட்ட இரசாயனப் பொருள்கள், துகள் பொருள்கள், உயிரியற் பொருள்கள் என்பன வளிமண்டலத்தில் கலப்பதைக் குறிக்கும்.

நாட்டின் பல பகுதிகளில் காற்றின் தரம் குறைந்துள்ளமைக்கு வடகிழக்கு பருவமழையுடன் தூசி துகள்களின் பரவல் அதிகரித்துள்ளமையே காரணம் என தேசிய கட்டட ஆய்வு நிறுவகத்தின் காற்று மாசு முகாமைத்துவ பிரிவின் ஆய்வாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் சில நாள்களில் இந்நிலை படிப்படியாக வழமைக்குத் திரும்பும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

ஆயினும், முன்னெச்சரிக்கையாக நோய்த் தாக்கத்துக்கு உள்ளாகும் ஆபத்துடையவர்கள் வெளியில் முகமூடி அணிந்து செல்வது நல்லது.

# கல்முனை சந்தான ஈஸ்வரர் ஆலய மஹா கும்பாபிஷேகம்!

**(வி.ரி. சகாதேவராஜா)**

கல்முனை சந்தான ஈஸ்வரர் ஆலய மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

நேற்று புதன்கிழமை கிரியைகள் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

இன்று வியாழக்கிழமை தொடக்கம் மூன்று தினங்கள் எண்ணைக்காப்பு இடம் பெறும்.

21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை மஹா கும்பாபிஷேகம் இடம் பெறும் என்று ஆலய பரிபாலன சபைத் தலைவர் வே.செவ்வேள் தெரிவித்தார்.



# சிவானந்தா பாடசாலைக்கு கிரிக்கெட் உபகரணங்கள்

**(பழுவூரான்)**

கல்லடி– உப்போடை சிவாநந்தா பழைய மாணவர் சங்கத் தலைவர் வ. வாசுதேவனின் வேண்டுகோளுக்கு இணங்க லண்டனில் வசிக்கும் புவன சிங்கம் வசீகரன் மட்டக்களப்பு மாவட்டத்தில் பாடசாலை கிரிக்கெட்டை வளர்க்கும் முகமாக சிவானந்தா பாடசாலைக்கு 4 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்களை வழங்கினார்.

இந்த நிகழ்வில் சிவானந்தா தேசிய பாடசாலை அதிபர் எஸ்.தயாபரன், பிரதி அதிபர் எஸ்.மதிமோகன், உதவி அதிபர் எஸ். மணிவண்ணன், உடல் கல்வி ஆசிரியர் ஆர்.தினேஷ் புவனசிங்கம், வசீகரனின் பிரதிநிதியாக வீ . வசந்தமோகன், பாடசாலை ஆசிரியர் ஜீ.சதீஷ்காந்த, பழைய மாணவர் சங்க செயலாளர் ஜெ. சாயிராஜன், விளை யாட்டு இணைப்பு செயலாளரும் கிரிக் கெட் பயிற்றுவிப்பாளருமான தி. டிஷாந்த் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# மயிலத்தமடு விவகாரத்தில் பாராமுகமாகவுள்ளது அரசு!

**இனவாதமே காரணம் என்று கூறுகிறார் வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர்**

**(எஸ்.நிதர்ஸன்)**

மயிலத்தமடு மாதவனை பிரதேசத்தில் தமிழ் பண்ணையாளர்களுக்கு எதிரான பேரினவாதிகளின் ஆக்கிரமிப்பை அரச இயந்திரம் தடுக்கவில்லை. மாறாக அதற்கு ஒத்துழைப்பாகவே இருக்கின்றது.

இவ்வாறு வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் தியாகராஜா நிரோஸ் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,



கிழக்கு மாகாணத்தின் மயிலத்தமடு மாதவனை பிரதேசத்தில் இடம்பெறும் திட்டமிட்ட சிங்களப் போரினவாத ஆக்கிரமிப்புக்கு எதிராக நாம் போராடுகின்றோம்.

வரலாற்று ரீதியில் எமது மக்களின் நிலங்கள் திட்டமிட்ட பௌத்த சிங்கள மயமாக்கத்துக்கு உட்பட்டே வருகின்றன. அதற்கு அரச இயந்திரமும் ஒத்துழைப்பாக இருந்து வருகின்றது. இலங்கையை இனவாதமற்றதாக அரசு வெளியுலகுக்குக் காட்ட எத்தனிக்கும் அதேவேளை ஆரவாரமற்ற வன்முறைகளின் ஊடாக தமிழ் மக்களின் பூர்வீகத்தையும் அவர்களது பொருளாதாரத்தையும் அழித்து வருகின்றது.

மயிலத்தமடு விவகாரத்தில் நீதிமன்றத் தீர்ப்புக்கள் நடைமுறைப்படுத்தப்படவில்லை. கால்நடைகள் வன்முறையான மிகக் கொடூரமான முறையில் கொல்லப்படுகின்றன. பண்ணையாளர்கள் தமிழ் மக்கள் என்ற காரணத்தின் அடிப்படையில் அவர்கள் அதிகார பலத்துடன் பேரினவாத நிகழ்ச்சி நிரல் முன்னெடுக்கப்படுகின்றது.

கிழக்கு மாகாணத்தின் ஒரு பகுதியில் நடைபெறும் ஆக்கிரமிப்பு அல்ல இந்தப் பிரச்சினை. அடிப்படையில் தமிழ் மக்களுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் இனவாத நிகழ்ச்சி நிரலுடனான ஆக்கிரமிப்பு.

நாம் வடக்கு, கிழக்கு எமது தாயகம் என்ற வகையில் எதிர்ப்பினை வெளிக்காட்டியுள்ளோம். தொடர்ந்தும் மயிலத்தமடுவில் போராடும் மக்களுக்கு ஆதரவாக சகல பிரதேசங்களிலும் வெளியுலகின் கவனத்தை ஈர்ப்பதற்கான போராட்டங்களை முன்னெடுக்க வேண்டிய பொறுப்பு உள்ளது.– என்றார்.

# கலைஞர் சுவதம் விருது!

(வி.ரி.சகாதேவராஜா)

அம்பாறை மாவட்ட இலக்கிய விழாவில் தம்பிலுவில் திருநாவுக்கரசு நாயனார் குருகுல பணிப்பாளர் ஓய்வு நிலை கிராம சேவை நிர்வாக உத்தியோகத்தர் க. இராஜரெத்தினத்துக்கு கலைஞர் சுவதம் விருது வழங்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்ட செயலாளர் சிந்தக அபே விக்கிரம வழங்கி இந்த விருதை வழங்கினார்.




## முதலாம் ஆண்டு நினைவு தின வைபவம்



## அமரர் சுந்தரம் டிவகலாலா

**ஆறுதல் நிறுவனத்தின் ஸ்தாபகர், முன்னாள் வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர்**

**காலம்** : 21.01.2024 (ஞாயிற்றுக்கிழமை)
**நேரம்**: முற்பகல் 9.30 மணி
**இடம்**: தந்தை செல்வா கலையரங்கம்
(யாழ் மத்திய கல்லூரி அருகாமை, யாழ்ப்பாணம்)
**தலைவர்**: பேராசியர் சு. மோகனதாஸ்
(வேந்தர், வவுனியாப் பல்கலைக்கழகம்)
**நினைவுப் பேருரை**:
"எதிர்கால நோக்கில் இலங்கையில் முன்பள்ளிக் கல்விச் செயற்பாடுகளும் இன்றைய நடைமுறைகளும்"

பேராசிரியர். ஜெ.இராசநாயகம்
தலைவர்,
கல்வியியல்துறை,
யாழ்ப்பாணம்.



# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்ட துறைசார்ந்த அதிகாரிகள்!

(எம். எப். நவாஸ்)

அட்டாளைச்சேனை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட மற்றும் கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்துக்குச் சொந்தமான ஒலுவில் ஆத்தியடி கட்டு வீதி அணைமையில் ஏற்பட்ட வெள்ளத்தால் சேதமடைந்துள்ளது.

அத்துடன் அட்டாளைச்சேனை, ஒலுவில், பாலமுனை பிரதேசங்களில் ஆயிரக் கணக்கான ஏக்கர் அளவில் நெற் காணிகள் அழிவடைந்ததுள்ளன. ஒலுவில், அஸ்ரப் நகர், தீகவாபி பிரதேச மக்களின் போக்குவரத்தும் முற்றாக துண்டிக்கப்பட்டுள்ளது.

அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம்.ஏ.சி. அகமது ஷாபீர் , கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் அம்பாறை மாவட்ட பிரதம பொறியியலாளர் எஸ். ராஜமோகன், அக்கரைப்பற்று பிரதேச நீர்ப்பாசன பொறியியலாளர் அக்கீல் அஹமட், நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் அக்கரைப்பற்று பிராந்திய முகாமையாளர் முஜாஹீத், வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் கல்முனை நிறைவேற்று பொறியியலாளர் நியாஸ், மற்றும் ஏனைய துறைசார்ந்த அதிகாரிகளும், முன்னாள் கிழக்கு மாகாண அமைச்சர் எம். எஸ் உதுமாலெப்பை மற்றும் அட்டாளைச்சேனை பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் ஏ.சி. நியாஸ், அட்டாளைச்சேனை பிரதேச விவசாய அமைப்புக்களின் சார்பில் எம்.ஐ.எம்.அஸ்ரப் ஆகியோர் இந்தப் பகுதிகளுக்குச் சென்று இவற்றைப் பார்வையிட்டுள்ளனர்.



# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வீதிகளைப் புனரமையுங்கள்

## அமைச்சர் பந்துல குணவர்த்தன பணிப்பு

(ஏ.எம்.ஆஷிப்)

அம்பாறை மாவட்டத்தில் வெள்ளத்தால் சேதமடைந்துள்ள வீதிகளை புனரமைப்பதற்கான நடவடிக்கைகளை துரிதமாக எடுக்குமாறு, போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன பணிப்புரை விடுத்துள்ளார்.

அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டபிள்யூ.எம். வீரசிங்கவின் அழைப்பையேற்று அம்பாறைக்கு விஜயம் செய்த அமைச்சர் பந்துல குணவர்த்தன, சேனநாயக்க சமுத்திரத்தின் நீர்ப்பாசன குளத்தின் வான் கதவுகள் திறக்கப்பட்டதால் சேதமடைந்த வீதிகள், கால்வாய்கள் என்பவற்றை நேரடியாக சென்று பார்வையிட்டுள்ளார்.

இதன்போது வெள்ளத்தால் சேதமடைந்துள்ள வீதிகள், பாலங்கள் தொடர்பான விவரங்களைச் சமர்ப்பிக்குமாறும் வீதிகளைப் புனரமைப்பதற்கான நடவடிக்கைகளை துரிதமாக எடுக்குமாறும் அவர் உத்தரவிட்டுள்ளார்.

# அம்பாறை கரையோரத்தில் விஷ ஜந்துக்கள் நடமாட்டம்!



அம்பாறை கடற்கரைப் பகுதியில் அண்மைக் காலமாக விஷஜந்துக்களின் நடமாட்டம் அதிகரித்துக் காணப்படுகிறது என்றும் பொது மக்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் அம்பாறை மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் காரணமாகப் பொது மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர் கொண்டிருந்தனர்.

இதனை அடுத்து அம்பாறை மாவட்டத்தில் ஏற்பட்ட மழைவெள்ள நிலைமைகளை கட்டுப்படுத்த ஆற்று முகத்து வாரம் வெட்டப்பட்டன.

இதனால் ஆறுகளில் தேங்கிய நீர் வெள்ளம் கடலை சென்று சங்கமித்தது டன் ஆற்றில் இருந்த விஷ ஜந்துக்கள் கடற்கரை ஓரங்களில் நடமாடி வருகின்றன.

இந்த விஷ ஜந்துக்கள் இந்த மாவட்டத்தில் மருதமுனை, பாண்டிருப்பு, பெரியநீலாவணை, நிந்தவூர் , அட்டாளைச்சேனை, ஒலுவில், அக்கரைப் பற்று, தம்பிலுவில், பொத்துவில் பகுதிகளில் நடமாடி வருகின்றன.

கடற்கரை பகுதிகளுக்கு செல்லும் பொது மக்களை அவதானமாக இருக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.



# கைதடி சிறுவர் பூங்காவின் ஆண்டு நிறைவு நிகழ்வுகள்

(த.சுபேசன்)

தென்மராட்சி, கைதடி சிறுவர் பூங்கா ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருடம் நிறைவு பெற்ற நிலையில் தைப்பொங்கல் தினத்தன்று ஓராண்டு நிறைவு நிகழ்வுகள் இடம்பெற்றன. கைதடி சிறார்களால் நிகழ்வுகள் நடத்தப்பட்டது. இதன்போது சிறார்கள் கேக் வெட்டி விழாவை ஆரம்பித்தனர்.




# மாந்தை மேற்கு பிரதேச செயலக பொங்கல் விழாவும் கௌரவிப்பும்

(மன்னார்)

மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தில் 2024 ஆம் ஆண்டுக்கான பொங்கல் விழாவும் மூத்த விவசாயிகளைக் கௌரவிக்கும் நிகழ்வும் பிரதேச செயலர் அரவிந்தராஜ் தலைமையில் நேற்று (17) காலை நடைபெற்றன.

இதன் போது அந்தப் பிரதேசங்களில் சிறந்த முறையில் விவசாய செய்கையில் ஈடுபட்டுவரும் 10 விவசாயிகள் மதிப்பளிக் கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் மாந்தை மேற்கு பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



# மன்னார் செயலகத்தில் பொங்கலும் கௌரவிப்பும்

(மன்னார் நிருபர்)

மன்னார் மாவட்டச் செயலகம் ஏற்பாடு செய்த சூரிய பொங்கல் நிகழ்வும், உழவர் கௌரவிப்பும் நேற்று புதன்கிழமை மன்னார் மாவட்டச் செயலகத்தில் இடம் பெற்றன.

மன்னார் மாவட்ட அரச அதிபர் கே.கனகேஸ்வரன் தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது.

கலை நிகழ்வுகள் இடம் பெற்றதோடு, மன்னார் மாவட்டத்தில் உள்ள மன்னார், நானாட்டான், முசலி, மாந்தை மேற்கு மற்றும் மடு ஆகிய ஐந்து பிரதேச செயலர் பிரிவுகளில் இருந்தும் தெரிவு செய்யப்பட்ட உழவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

நிகழ்வில் மாவட்டச் செயலக அலுவலர்கள், பிரதேச செயலாளர்கள், மேலதிக மாவட்ட செயலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.







# 14 அரசியல் கைதிகளே தற்போது சிறைகளில்!

## வவுனியாவில் நீதி அமைச்சர் தெரிவிப்பு

(கி.வசந்தரூபன்)

"சிறைகளில் தற்போது 14 அரசியல் கைதிகளே உள்ளனர். அவர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்கு விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன."

– இவ்வாறு நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

வவுனியா, வைரவபுளியங்குளம் ஆதி விநாயகர் ஆலயத்துக்கு நேற்று விஜயம் செய்த நீதி அமைச்சர் அங்கு நடைபெற்ற விசேட பூஜை வழிபாட்டில் கலந்துகொண்டார். அதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கந்தக்காடு முகாமில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் விசாரணை செய்ய ஓய்வுபெற்ற நீதியரசர் தலைமையில் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. அங்கு புனர்வாழ்வு பெறுபவர்கள், போதைப்பொருள் பாவனைக்கு அடிமை யானவர்கள் மற்றும் யுக்திய நடவடிக் கையில் கைது செய்யப்பட்டவர்களாவர். மூன்று பிரிவுகளாகக் கந்தக்காடு முகாம் இயங்கி வருகின்றது. அங்கு இடம்பெற்ற சம்பவங்களையடுத்து அதன் நிர்வாக அதிகாரிகள் மற்றும் பணியாளர்களை இடமாற்றம் செய்யும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

போதைப்பொருள் பாவனை அதிகரித்து வருகின்றது. அது இளம் சமுதாயத்தையும் பாதித்துள்ளது. யுக்திய நடவடிக்கை மூலம் போதைப்பொருள் விற்பனை மற்றும் போதைப்பொருள் மாபியாக்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. யுக்திய நடவடிக்கையில் கைது செய்யப்பட்டவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது.

அத்துடன், அரசியல் கைதிகள் விடயத்தில் 5 அரசியல் கைதிகள் இறுதியாக விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இன்னும் 14 அரசியல் கைதிகளே உள்ளனர். அவர்களுக்கு எதிராக வழக்கு விசாரணைகள் நீதிமன்றத்தில் இடம்பெற்று வருகின்றன." – என்றார்.













# பிரதமர் மோடி வருகையை முன்னிட்டு சென்னையில் 5 அடுக்கு பாதுகாப்பு



பிரதமர் நரேந்திர மோடி நாளை சென்னைக்கு வருகிறார். அவர் நேரு விளையாட்டு அரங்கில், கேலோ இந்தியா யூத் கேம்ஸ்-2023 விளையாட்டு போட்டியை அவர் தொடங்கி வைக்கிறார்.

இந்த நிலையில் பிரதமரின் வருகையை முன்னிட்டு சென்னையில், பெருநகர பொலிஸார் சார்பில் 22 ஆயிரம் பொலிஸ் அதிகாரிகளுடன் 5 அடுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில்,

"பிரதமர் நரேந்திர மோடி நாளை சென்னை, பெரியமேட்டிலுள்ள, ஜவஹர் லால் நேரு விளையாட்டரங்கில், கேலோ இந்தியா யூத் கேம்ஸ்-2023 விளையாட்டு போட்டியை தொடங்கி வைக்கிறார்.

பிரதமரின் சென்னை வருகை யையொட்டி சிறப்பு பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்வது குறித்து, சென்னை பெருநகர பொலிஸ் ஆணையாளர் சந்தீப் ராய் ரத்தோர் தலைமையில், மேலதிக பொலிஸ் ஆணையாளர்கள், இணை ஆணையாளர்கள் மற்றும் துணை ஆணையாளர்களுடன் கலந் தாய்வு நடைபெற்றது.

அந்த ஆலோசனைக் கூட்டத்தில், பிரதமரின் வருகையை ஒட்டி சென்னை பெருநகர பொலிஸ் ஆணையாளர் தலைமையில், சென்னை பெருநகர மேலதிக பொலிஸ் ஆணையாளர்கள், பொலிஸ் இணை ஆணையாளர்கள், பொலிஸ் துணை ஆணையாளர்கள், உதவி ஆணையாளர்கள், சட்டம், ஒழுங்கு, குற்றப்பிரிவு, போக்குவரத்து மற்றும் சிறப்பு பிரிவுகளின் பொலிஸ் அதி காரிகள், ஆயுதப்படை, கொமாண்டோ, தமிழ்நாடு சிறப்பு பொலிஸ் படை உள்பட 22 ஆயிரம் பொலிஸ் அதிகாரிகள் 5 அடுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய் யப்பட்டுள்ளது.

பிரதமரின் நிகழ்ச்சிகள் நடைபெறும் சென்னை, பெரியமேடு ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம், சென்னை விமான நிலையம், கிண்டி ஆளுநர் மாளிகை மற்றும் அடையாறு கடற்படை தளம் ஆகிய இடங்களிலும், அதன் சுற்றுப்புறங்களிலும், சென்னையில் செல்லும் வழித்தடங்களிலும், பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு, தீவிர சோதனைகள் மற்றும் கண் காணிப்பு பணிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும், சென்னையில் உள்ள தங்கும் விடுதிகள், நட்சத்திர விடுதிகள் மற்றும் விடுதிகளிலும் சோதனைகள் மேற்கொண்டு சந்தேக நபர்கள் மற்றும் அந்நிய நபர்கள் உள்ளனரா என கண்காணித்து வருகின்றனர்.

மேலும், முக்கிய வீதிகள் மற்றும் சந்திகளில் தீவிர வாகன சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது தவிர, சென்னையில் உள்ள முக்கிய ரயில் நிலையங்கள், ஸ்ரீபஸ் முனை யங்களிலும் பொலிஸார் மூலம் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு, தீவிரமாக கண்காணித்து வருகின்றனர்.

மேலும் பிரதமர் வருகையையொட்டி, சென்னை பெருநகர பொலிஸ் ஆணையாளரின் உத்தரவின்பேரில், சென்னை பெருநகர பொலிஸ் எல்லைக் குட்பட்ட பகுதிகளில் ட்ரோன்கள் மற்றும் ஆளில்லா வான்வழி வாகனங்கள் பறக்க தடை விதிக்கப்பட்டுள்ளது" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வட மாநிலங்களில் தொடர்ந்து கடும் குளிர்: 100 இற்கும் மேற்பட்ட விமானங்கள் தாமதம்



வட மாநிலங்களில் கடந்த டிசம்பர் மாதம் முதல் கடுமையான பனிப்பொழிவு நீடிக்கிறது. இதன் காரணமாக இம்மாத தொடக்கத்தில் டில்லி, உத்தரபிரதேசம், ராஜஸ்தான் உள்ளிட்ட மாநிலங்களில் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப் பட்டுள்ளது.

கடந்த வாரம் பாடசாலைகள் மீண்டும் திறக்கப்பட்டன. ஆனால், தொடர்ந்து உறைய வைக்கும் குளிர் நீடிப்பதால் இந்த வாரம் பாடசாலைகளுக்கு மீண்டும் விடுமுறை விடப்பட்டுள்ளது.

பிஹாரில் எதிர்வரும் 20 ஆம் திகதி வரை, 1 முதல் 8 ஆம் வகுப்பு வரையிலான பாடசாலைகள் செயல்படாது என்று அந்த மாநில அரசு அறிவித்துள்ளது. அதேபோல் டில்லி உள்ளிட்ட பல வட மாநிலங்களில் நேற்று வரை பாடசாலைகளுக்கு விடு முறை விடப்பட்டு இருந்தது.

இந்த நிலையில் நேற்றும் பல மாநிலங்களில் கடும் குளிர் நீடித்தது. மேலும் கடும் பனி மூட்டமும் இருந்தது. இதன் காரணமாக டில்லி ரயில் நிலை யத்துக்கு வரவேண்டிய ரயில்கள் மிகவும் தாமதமாக வந்தன. இதனால் ரயிலுக்குக் காத்திருந்தவர்களும், ரயில்களில் வரு பவர்களை அழைத்துச் செல்ல வந்த வர்களும் ரயில் நிலையத்தில் வெகு நேரம் காத்திருக்கும் நிலை ஏற்பட்டது.

டில்லி விமான நிலையத்தில் கடும் பனி மூட்டம் நிலவியதால் 100 இற்கும் மேற்பட்ட விமானச் சேவைகள் பாதிக்கப் பட்டன. கடந்த ஞாயிற்றுக் கிழமை முதல் நேற்று வரை 600 இற்கும் மேற்பட்ட விமா னங்கள் தாமதமாக வந்திறங்கின.

அதேபோல் 100 இற்கும் மேற்பட்ட விமானச் சேவைகள் ரத்து செய்யப்பட்டன.

# சர்வதேச பயங்கரவாத குழுவாக ஹவுதியை அறிவித்தது அமெரிக்கா



செங்கடல் சர்வதேச வணிகப் பாதையில் ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலுக்கு காரணமாக இருப்பதாக ஏமனின் ஹவுதி படையை சர்வதேச பயங்கரவாத குழுவாக அமெரிக்கா பட்டியலிட்டுள்ளது. மேலும் ஹவுதிகளின் மீதான தாக்குதல்களையும் தொடர்ந்து வருகிறது.

ஏமன் உள்நாட்டுப் போரில் அந்த நாட்டின் பெரும் பகுதியை கைப்பற்றிய ஹவுதிகள் ஹமாஸ்களுக்கு ஆதரவாக இஸ்ரேஸ் துறைமுகத்துக்கு செல்லும் அந்நாட்டுடன் தொடர்புடைய கப்பல்கள் மீது தாக்குதல் நடத்துவதாகக் கூறி, செங்கடல் பாதையில் செல்லும் கப்பல்கள் மீது ஏவுகணை மற்றும் ஆளில்லா விமானங்கள் கொண்டு தாக்குதல் நடத்தியது.

இவ்வாறு தாக்குதலுக்குள்ளான கப்பல்களில் பெரும்பாலானவை இஸ்ரேலுடன் தொடர்பு இல்லாதவை. இதனால் செங்கடல் வணிகப் பாதையில் அச்சுறுத்தல் ஏற்பட்டது. இதற்குப் பதிலடி கொடுக்கும் விதமாக அமெரிக்கா ஏமனின் ஹவுதிகளின் இலக்குகள் மீது தாக்குதல் நடத்தியது.

இந்த பதிலடியின் மற்றொரு முன்னேற்றமாக ஏமனின் ஹவுதி பயங்கராவாதிகளை 'சர்வதேச பயங்கரவாத குழு' என்று அமெரிக்கா பட்டியலிட்டுள்ளது. மேலும் ஹவுதிகளின் இலக்குகள் மீதான தாக்குதல்களை தொடர்வதாக அறிவித்திருக்கிறது. இது சமீபமாக ஏமன் மீது நடத்தப்பட்ட நான்காவது நேரடித் தாக்குதலாகும்.

ஹவுதிகளை தீவிரவாதிகள் பட்டியலில் இணைப்பதால் அவர்களின் நிதி மற்றும் ஆயுத வளங்களை மட்டுப்படுத்தும் என்பது அமெரிக்காவின் கணக்கு. இதனை அமெரிக்காவின் அரசு செயலாளர் அண்டனி பிளிங்கன் அறிவித்துள்ளார். என்றாலும் இஸ்ரேலுக்குச் செல்லும் கப்பல்கள் மீதான தாக்குதல்கள் தொடரும் என்றும், பயங்கரவாத குழு என்ற அறிவிப்பு தங்களின் நிலைப்பாட்டை மாற்றாது என்றும் ஹவுதிகளின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

முன்னதாக கடந்த வாரத்தில், செங்கடல் பாதையில் செல்லும் சர்வதேச கப்பல்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்களை நிறுத்துமாறு ஐக்கிய நாடுகள் சபை மற்றும் சர்வதேச நாடுகள் அழைப்பு விடுத்தும் ஹவுதிகள் அதற்கு செவி சாய்க்கவில்லை.

இதனைத் தொடர்ந்து ஏமன் நாட்டின் ஹவுதிகள் தொடர்புடைய இலக்குகள் மீது அமெரிக்காவும், பிரிட்டனும் தாக்குதல் நடத்தின. ஹவுதிகள் தொடர்புடைய 30 இலக்குகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது.

தாக்குதல் குறித்து பேசிய அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், "எங்களுடைய மக்களுக்கு எதிரான நடவடிக்கைகள் மற்றும் கப்பல்கள் செல்லும் வழித்தடத்தின் சுதந்திரத்தை கெடுக்கும் எந்தச் செயலையும் நாங்களோ எங்களது கூட்டாளிகளோ பொறுத்துக் கொள்ள மாட்டோம் என்பதை இந்தத் தாக்குதல்கள் தெளிவாக உறுதிப்படுத்துகின்றன.

ஹவுதிகள் நேரடியாக அமெரிக்க கப்பல்கள் மீது தாக்குதல்கள் நடத்தியுள்ளனர். செங்கடல் வணிகப் பாதையைப் பாதுகாக்க அமெரிக்கா தலைமையிலான 'ஒபரேஷன் பிராஸ்பெரிட்டி கார்டியன்'-க்கு 20 இற்கும் அதிகமான நாடுகள் ஆதரவு தெரிவித்துள்ளன.

என்றாலும் தற்போதைய அமெரிக்க, பிரிட்டன் தாக்குதல் அந்த ஒபரேஷனுடன் தொடர்புடையது இல்லை. ஹவுதிகளின் பொறுப்பற்ற தாக்குதல்களுக்கு சர்வதேச சமூகத்தின் பதிலடி ஒற்றுமையானது உறுதியானது" என்று தெரிவித்திருந்தார்.

செங்கடல் வணிகப் பாதையை பாதுகாப்பதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனின் நிர்வாகம் உறுதி அளித்ததைத் தொடர்ந்து ஹவுதிகள் மீது அமெரிக்கா 12 ஆம் தேதி மீண்டும் புதிய தாக்குதல் நடத்தியது.

அப்போது ஹவுதிகளின் ராடார் தளங்களை குறிவைத்து தாக்குதல் நடத்தப்பட்டன. இந்தப் பின்னணியில் அமெரிக்கா தனது தாக்குதலைத் தொடர்ந்து வருகிறது. சமீபத்தில் நடத்தப்பட்ட தாக்குதலில் இது நான்காவது நேரடித்தாக்குதல் என்பது குறிப்பிடத்தக்கது.

ஐரோப்பா – ஆசியா இடையேயான கப்பல் போக்குவரத்தில் 15 சதவீதம் பங்கு வகிக்கும் முக்கிய கடல் வணிகப் பாதையான செங்கடல் பாதையில் இதுவரை 27 இற்கும் அதிகமான கப்பல்கள் மீது ஹவுதிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர். இது சர்வதேச அளவில் மிகப்பெரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது.

# ஈரான் புரட்சிப் படைகள் முகாம்கள் மீது தாக்குதல்: உறுதிப்படுத்தினார் பாகிஸ்தான் உளவு அதிகாரி

ஈரானின் புரட்சிப் படைகள் முகாம்களை குறிவைத்து துல்லியத் தாக்குதல் நடத்தியுள்ளதாக பாகிஸ்தான் உளவுத் துறை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதனை நேரடியாக உறுதிப்படுத்தாத ஈரான், பாகிஸ்தானுடனான எல்லைப் பகுதியில் பல்வேறு குண்டுவெடிப்புகள் நிகழ்ந்துள்ளன என தெரிவித்துள்ளது. பாகிஸ்தான் மீது ஈரான் தாக்குதல் நடத்திய அடுத்த நாளே இந்தத் தாக்குதல் நடைபெற்றுள்ளது.

ஈரான் மீதான தாக்குதல் தொடர்பாக பாகிஸ்தான் உளவு அதிகாரி, "நாங்கள் பாகிஸ்தானுக்கு எதிராக ஈரான் மண்ணில் இருந்து இயங்கும் ஆயுதக் குழுக்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளோம் என்பதை மட்டுமே இப்போதைக்கு உறுதி செய்ய முடியும். மேலதிக விவரங்களுடன் அரசு அதிகாரபூர்வ அறிக்கையை வெளியிடும்" என்றார்.

முன்னதாக நேற்று முன்தினம் இரவு, ஈரான் – பாகிஸ்தான் எல்லையில் பலுசிஸ்தான் பகுதியில் உள்ள சன்னி தீவிரவாத அமைப்பான ஜெய்ஷ் அல்-தும் முகாம்கள் மீது ஈரான் ராணுவம் ஏவுகணைகள் மற்றும் ட்ரோன் மூலம் தாக்குதல் நடத்தியது. இதில் 2 குழந்தைகள் உயிரிழந்தனர். 3 பேர் காயம் அடைந்தனர்.

ஏற்கெனவே மேற்கு ஆசியப் பிராந்தியத்தில், இஸ்ரேல் – ஹமாஸ் இடையிலான போர் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தி உள்ள நிலையில் பாகிஸ்தான் மீது ஈரான் ஏவுகணை தாக்குதல் மேற்கொண்டுள்ளமை பதற்றத்தை மேலும் அதிகரித்துள்ளது.